| அனுப்புநர் | பெறுநர் |
| --- | --- |
| தண்.வசுந்தராதேவி, எம்.ஏ., எம்.எட்., எம்.பில்.,<br>அரசுத் தேர்வுகள் இயக்குநர்,<br>சென்னை – 600 006. | அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்கள்,<br>மற்றும் இணை இயக்குநர் (கல்வி), புதுச்சேரி |

**ந.க.எண். 000080/எப்.1/2019 நாள் : 20.05.2019**

**ஐயா/அம்மையீர்**

பொருள் : மேல்நிலை முதலாம் ஆண்டு பொதுத்தேர்வு, மார்ச் 2019 விடைத்தாள் மறுமதிப்பீடு/ மறுகூட்டல் – விண்ணப்பங்கள் பெற்றுக் கொள்வது தொடர்பான அறிவுரைகள் – சார்பு.

பார்வை: அரசுத் தேர்வுகள் இயக்கக செய்திக்குறிப்பு நாள். 20.05.2019.

-----

மார்ச் 2019 மேல்நிலை முதலாம் ஆண்டு பொதுத் தேர்வெழுதி விடைத்தாள் நகல் கோரிய தேர்வர்களுக்கு **21 .05.2019** முதல் விடைத்தாள் நகல்களை பதிவிறக்கம் செய்ய பார்வையில் கண்டுள்ள செய்திக்குறிப்பின் மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், அச்செய்திக்குறிப்பில் விடைத்தாள் நகல்கள் பதிவிறக்கம் செய்யும் தேர்வர்கள், மறுமதிப்பீடு மற்றும் மறுகூட்டலுக்கு விண்ணப்பிக்க விரும்பினால், அதற்கான விண்ணப்பத்தை பதிவிறக்கம் செய்து **21.05.2019 பிற்பகல் 02.00 மணி முதல் 23 .05.2019 வரை மாலை 05.00 மணிக்குள்** சம்பந்தப்பட்ட முதன்மைக்கல்வி அலுவலகத்தில் உரிய கட்டணத் தொகையை விண்ணப்பத்தோடு சேர்த்து ஒப்படைக்க வேண்டுமென்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

எனவே, அதற்கேற்ப அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்களும், கீழ்க்காணும் வழிமுறைகளைப் பின்பற்றி தங்களது மாவட்டத்திற்கான மறுமதிப்பீடு/மறுகூட்டல் விண்ணப்பங்களைப் பெற்று, ஆன்–லைன் மூலம் பதிவு செய்ய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

1. விடைத்தாள் நகல் பெற்ற தேர்வர்கள் மட்டுமே, மறுமதிப்பீடு/மறுகூட்டலுக்கு விண்ணப்பிக்க தகுதியுடையவர்களாவார்கள்.

2. விடைத்தாள் நகல் பதிவிறக்கம் செய்தபின், அதே இணையதளத்தில் மறுமதிப்பீடு/மறுகூட்டலுக்கான விண்ணப்பத்தையும் தேர்வர்கள் பதிவிறக்கம் செய்து, அவ்விண்ணப்பத்திலுள்ள கலங்களை பூர்த்தி செய்து கீழ்க்காணும் கட்டணத் தொகையோடு சேர்த்து அவ்விண்ணப்பத்தை முதன்மைக் கல்வி அலுவலகத்தில் ஒப்படைக்க வேண்டும்.

..2..

<u>மறுகூட்டல்</u>

உயிரியல் பாடம் மட்டும் ரூ. 305/–
ஏனைய பாடங்கள் (ஒவ்வொன்றிற்கும்) ரூ. 205/–

<u>மறுமதிப்பீடு</u>

பாடம் (ஒவ்வொன்றிற்கும்) ரூ.505/–

3. முதன்மைக் கல்வி அலுவலர்கள் மேற்கண்டவாறு விண்ணப்பங்களை, பெற்றவுடன், www.tndge.in என்ற இணையதளத்தில் தங்களுக்கான USER ID & PASSWORD ஐ பயன்படுத்தி **21.05.2019 பிற்பகல் 02.00 மணி முதல் 23.05.2019 மாலை 05.00 மணி வரை ஆன்–லைனில் அன்றே பதிவேற்றம் செய்ய வேண்டும். பதிவேற்றம் செய்வதற்கென தனியே கால அவகாசம் வழங்கப்பட மாட்டாது.**

4. மறுகூட்டல்/மறுமதிப்பீட்டிற்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பத்தினை தனித்தனியாக பட்டியலிட்டு விண்ணப்பத்திற்கான தொகையினை **"Director of Government Examinations, Chennai -6"** என்ற பெயரில் வரைவு காசோலையாக எடுத்து, அதனுடன் மேற்குறிப்பிட்டுள்ள பட்டியலையும், கீழ்க்காணும் முதன்மைக் கல்வி அலுவலரின் கையொப்பமிட்ட (with sign) சான்றிதழையும் இணைத்து **திரு. கா. திருநாவுக்கரசு, துணை இயக்குநர் (பொது), அரசுத் தேர்வுகள் இயக்ககம், சென்னை – 6** என்ற முகவரிக்கு பதிவஞ்சல் வழியாக **27 .05.2019–க்குள்** அனுப்பி வைக்க வேண்டும்.

<u>**சான்றிதழ்**</u>

மறுகூட்டல்/ மறுமதிப்பீட்டிற்கு விண்ணப்பித்த தேர்வர்களின் விண்ணப்பங்கள் அனைத்தும் பதிவேற்றம் செய்யப்பட்டது.

**முதன்மைக் கல்வி அலுவலரின் கையொப்பம்**

**ஒம்/–**
**இயக்குநர்**

<u>**நகல்**</u>

1. துணை இயக்குநர்(பொது),
அரசுத் தேர்வுகள் இயக்ககம், சென்னை – 6 – தொடர் நடவடிக்கைக்காக
2. அனைத்து மாவட்ட அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர்கள்
3. அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள் } – தகவலுக்காக